# அருணோதயக் கல்லூரி-அளவெட்டி
# ARUNODAYA COLLEGE-ALAVEDDY

**Principal**
**N.KETHEESWARAN**
**BA. Dip in Education**

**Deputy Principal**
**S.MATHIVATHANAN**
**B Com Dip in Education**

**E.mail; arunodaja @gmail.com**
**Local T.P-No: 0212241072**
**Our Website address:-www.arunodayacollege.com**


**17/_09_/2010**

---

## தேவை

அருணோதயக்கல்லூரி தற்போது கல்வி, விளையாட்டுத்துறைகளில் துரித வளர்ச்சிகண்டு வருகின்றது.1960களில் இருந்த விஞ்ஞான கணிதப்பிரிவுகள் பல்வேறுகாரணங்களால் 1980களில் எமது பாடசாலையில் இல்லாமல் போனமை அளவையூரினைச்சேர்ந்த பல்வேறு மக்களையும் பழையமாணவர்களையும் கவலையில் ஆழ்த்தியது.முன்னர் எமது பாடசாலையில் விஞ்ஞானப்பிரிவில் கல்விகற்ற பல மாணவர்கள் வைத்தியர்களாக எமது நாட்டிலும் புலம்பெயர்நாடுகளிலும் சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது.எனினும் தற்போது கல்லூரியின் எழுச்சிகாரணமாக பாடசாலை மாணவரின் தொகை பெரிதும் அதிகரித்துள்ளது. இதனால் கல்லூரியில் அடுத்த வருடம்(2011) விஞ்ஞான கணிதப்பிரிவினை பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளை ஏற்று ஆரம்பிப்பதற்கு கல்லூரி நிர்வாகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கல்லூரித்தாயிற்கு பல்வேறு வளப்பற்றாக்குறைகள் இருப்பதனால் அக்குறைகளை கல்லூரி தீர்த்து வெற்றிப்பயணத்தினை மேற்கொண்டு வீறுநடை போடுவதற்காக அருணோதயாவின் புலம்பெயர்ந்து மேற்கத்தய நாடுகளில் வசிக்கும் பழையமாணவர்களிடம் உதவிகளை எதிர்பார்க்கின்றது. எமது பழையமாணவர்களின் தொடர்பினை அருணோதயக்கல்லூரி எதிர்பார்த்து நிற்கின்றது. எமது பாடசாலை பழையமாணவர்கள் கல்லூரிக்கு உதவக்கூடிய வசதியினைக்கொண்டிருப்பதும் அதற்கான மனப்பாங்கினை உடையவர்களாகவிருப்பதும் எமது வரப்பிரசாதமாகக்கருதுகின்றோம்.

- ✓ விளையாட்டு,சுற்றுலா நிகழ்வுகளிற்கு மாணவரை அழைத்துச்செல்ல பெருந்தொகைப்பணத்தினை கல்லூரியும் மாணவரும் செலவிட வேண்டி உள்ளது. எனவே வாகனம் ஒன்றினை பெற்றுத்தந்தால் சிறப்பானதாயிருக்கும்.
- ✓ சோலை போன்று உள்ள எமது கல்லூரி வளவிற்குள் மாடுகள் வந்து பூங்கன்றுகளை அழிப்பதனால் கல்லூரியின் பின் பகுதிக்கு மதில் கட்ட வேண்டி இருப்பதனால் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. (ரூ.5இலட்சம்)
- ✓ எமது கணினி அறையில் கணனிகள் பற்றாக்குறை காரணமாக ஒரு வகுப்பின் எல்லா மாணவரும் ஒரே நேரத்தில் கணினியைப்பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.குறைந்தது 10 கணினிகளாவது தேவைப்படுகின்றது.
- ✓ விளையாட்டுத்துறைபயிற்சி பெறும் மாணவர்களின் சத்துணவு வழங்க மாதாந்தம் ரூ5000 வீதம் வருடமொன்றிற்கு ரூ60000 தேவைப்படுகின்றது. இதற்கான பண உதவியினை பழைய மாணவரிடம் எதிர்பார்க்கின்றோம்.

- ✓ கல்வித்துறையில்,விளையாட்டுத்துறையில் சிறந்த பெறுபேற்றினைப்பெற்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களை எமது பழையமாணவர்களிடம் எதிர்பார்க்கின்றோம். இதனை அவர்கள் நினைவுப்பரிசில்களாக வழங்கலாம்.
- ✓ எமது பாடசாலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறியை விருத்திசெய்வதற்காக இணையவசதி அவசியம் தேவைப்படுகின்றது. இதற்கான யுனுளுடு இணைப்பிற்காக ரூ30000 செலவாகும் எனக்கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவியை பழைய மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.
- ✓ எமது பாடசாலைக்கு ஒரு உள்ளக பிராத்தனை மண்டபம்(**Assembly Hall**) இல்லாமை பெருங்குறையாகும். எமது பாடசாலையின் அருணாசல உடையார்மண்டபத்திற்கு மேல் உள்ள மண்டபத்தினை பாடசாலை நிகழ்வுகளுக்கான மண்டபமாக மாற்றுவதற்கும் ஜன்னல்கள் இட்டு மூடிக்கட்டுவதற்கும் சீலிங் அடிப்பதற்குமாக 2மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

- ➢ இத்தேவைகளை எமதுபாடசாலையின் பழைய மாணவர் சங்கங்களோ அல்லது நலன்விரும்பிகளோ, பழைய மாணவர்களோ கருத்திற்கொண்டு இத்தேவைகள் நிறைவுபெற ஆவனசெய்தால் எமது பாடசாலையை வெற்றிப்பாதையில் கொண்டு செல்ல உதவியாயிருப்பதுடன் எமது கல்லூரியில் தங்கியிருக்கும் அளவையூர் சமூகத்திற்கும் அது பேருதவியாயிருக்கும்.

அருணோதயக்கல்லூரி
அளவெட்டி